**ம.க.கு.ந.க.எண்.அ8/6729/2008**
**ஆணையாளரின் 10/10/2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :542/2008 பொருள் எண்.6

**அரசாணை அமலாக்கத்திற்கு அனுமதி வேண்டி**

அரசாணை நிலை எண்.222, நிதி (ஓய்வூதியம்)த் துறை நாள்:03.06.2008ல், மத்திய அரசு தீர்மான எண்.F5/7/2003/ECB & PR நாள் 12.03.2005 மற்றும் 21.04.2005ல், மத்திய அரசுப்பணியில் 01.01.2004ல் சேர்ந்த அரசு அலுவலர்கள் புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு அவர்கள் கணக்கில் உள்ள தொகைக்கு 8 சதவீகிதம் வட்டி அளிக்க ஆணையிட்டுள்ளது.

மாநில அரசு புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை 01.04.2003 முதல் செயல்படுத்தி வருகிறது. எனவே, 01.04.2003 முதல் மாநில அரசுப் பணியில் பணியமர்த்தப்பட்ட அரசு ஊழியர்கள் புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்கப்பட்டு அவர்கள் கணக்கில் உள்ள தொகைக்கு 8 சதவிகிதம் வட்டி அளிக்க முடிவெடுத்து அரசு அவ்வாறே ஆணையிட்டுள்ளது. மறு ஆணை வெளியிடும் வரை இந்த வட்டி விகிதம் செயலாக்கத்தில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை நிலை எண்.222, நிதி (ஓய்வூதியம்)த் துறை நாள் 03.06.2008.யினை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.248/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/6305/2008.</u>**

**<u>ஆணையாளரின் 10/10/2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :543/2008 பொருள் எண்.7

**<u>அரசாணை அமலாக்கத்திற்கு அனுமதி வேண்டி</u>**

அரசாணை நிலை எண்.349, நிதி (படிகள்) துறை நாள் 12.08.2008ல் பொது வைப்பு நிதி (தமிழ்நாடு), பங்கு தொகை பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ்நாடு) புதுக்கோட்டை மாநில வைப்பு நிதி, திருவாங்கூர் மாநில வைப்பு நிதி, திருவாங்கூர் படைப்பிரிவு பணியாளர் வைப்பு நிதி ஆகிய வைப்பு நிதிகளில் சேர்ந்துள்ள தொகைகளுக்கு 01.04.2007 முதல் (2007.-2008ம் நிதியாண்டிற்கு) வட்டி விகிதம் 8 சதவீதமே தொடருமென ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மூன்று மாதங்களுக்கு மேல் வழங்கப்படாமல் வைப்பு நிதியில் உள்ள காலங்கடந்து வழங்கப்படும் இறுதி வைப்பு தொகைக்கும் 8 சதவீத வட்டி தொடரும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டள்ளது.

எனவே, அரசாணை நிலை எண்.349, நிதி (படிகள்) துறை, நாள் 12.08.2008யினை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.249/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**பொது.ந.க.எண். பி3/16262/08**
**ஆணையரின் 15.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :544/2008 பொருள் எண். 8

**அரசாணை அமலாக்கம்**

அரசாணை எண் 272 மற்றும் 273, நிதி(ஓய்வூதியம்)துறை, நாள் 15.06.1998 ஐ நடைமுறை செய்யும் பொருட்டு வெளியிடப்பட்ட அரசாணை எண் 22, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 08.10.2006–ஐ மன்றத்தின் அனுமதி பெற்று சென்னை மாநகாட்சி ஓய்வூதியர்கள்/குடும்ப ஓய்வூதியர்களுக்கு இவ்வலுவலக சுற்றறிக்கை பொது.ந.க.எண்: பி3/16262/07, நாள் 07.06.2007 மூலம் அமலாக்கம் செய்யப்பட்டு ஓய்வூதியர்கள்/குடும்ப ஓய்வூதியர்களின் ஓய்வூதியக் கோப்புகளை உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு உட்படுத்தி ஓய்வூதியம் திருத்தி அமைக்கப்பட்டு வருகிறது. அரசாணை எண் 449, நிதி(ஓ) துறை, நாள் 12.10.1999–ல் ''அரசாணை எண் 272 மற்றும் 273 நிதி(ஓய்வூதியம்) துறை, நாள் 15.06.1998 ஆகியவற்றை அமல்படுத்த ஓய்வூதியர்கள் ஓய்வு பெற்ற பொழுது அவர்களது சராசரி ஊதியம் மற்றும் நிகர தகுதி பணிக்காலம் மற்றும் பணிக்காலத்தில் காலமாகி இருப்பின், காலமான நாளில் பெற்ற ஊதிய விவரம் ஆகியவற்றைக் கொண்டு மேற்படி அரசாணையில் உள்ள தகவல் கையேட்டினை (Ready recokener) கொண்டு ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் ஆகியன கணக்கிட்டு திருத்தி அமைத்திட ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி அரசாணையை சென்னை மாநகராட்சி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, இவ்வலுவலக சுற்றறிக்கை பொ.து.ந.க. எண்.பி3/16262/08 நாள் 14.07.2008–ன் வாயிலாக சென்னை மாநகராட்சியில் அமலாக்கம் செய்யப்பட்டது.

எனவே, ''அரசாணை எண் 272 மற்றும் 273 நிதி(ஓய்வூதியம்)துறை, நாள் 15.06.1998ன் படி ஓய்வூதியம் திருத்தியமைக்க, அரசாணை எண் 449, நிதி(ஓ) துறை, நாள் 12.10.1999–ல் அறிவுறுத்தியபடி ஓய்வூதியர்கள் ஓய்வு பெற்ற பொழுது அவர்களது சராசரி ஊதியம் மற்றும் நிகர தகுதி பணிக்காலம் மற்றும் பணிக்காலத்தில் காலமாகி இருப்பின், காலமான நாளில் பெற்ற ஊதிய விவரம் ஆகியவற்றை மேற்படி அரசாணையில் உள்ள தகவல் கையேட்டினை (Ready recokener) கொண்டு ஓய்வூதியம் /குடும்ப ஓய்வூதியம் ஆகியவை கணக்கிட்டு திருத்தி வழங்கியமைக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.274/2008, நாள்: 24.10.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.2.ந.க.எண்.சி3/5538/2008**
**ஆணையர் அவர்களின் 01.09.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :545/2008 பொருள் எண்.9

**பணியமைப்பு – சென்னை மாநகராட்சி – சுகாதார ஆய்வாளர் படிப்பு பயின்றவர்கள் – ஊதிய விகிதம் நிர்ணயம் செய்தல் – அரசாணையை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்திட – ஒப்புதல் வேண்டி.**

அரசாணை நிலை எண்.120 நிதித் துறை நாள்.02.02.1990ன்படி பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறையில் உள்ள சுகாதார ஆய்வாளர் மற்றும் அடிப்படை சுகாதார ஆய்வாளர் (தகுதியுடையவர்கள்) ஆகிய இருவகைப் பணியிடங்களின் ஊதிய விகிதம் 01.06.1988 முதல் ரூ.1200–2040 எனவும், 04.11.88 முதல் ரூ.1350–2200 எனவும் திருத்தியமைத்து வெளியிடப்பட்ட ஆணை எண்.106, நிதித் துறை, நாள்.30.01.1990ஐ மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணியாற்றும் சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கு நீட்டிப்பு செய்திடப்படாத காரணத்தினால் சென்னை மாநகராட்சியில் பணியாற்றிவரும் சுகாதார ஆய்வாளர்களுக்கு வழங்கிட கோரி உரிய அரசாணை வெளியிட இவ்வலுவலக கடிதம் நாள்.29.01.06ல் குறிப்பிட்டுள்ளவாறு அரசிற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது.

அரசு கடித எண்.5179/மா.ந.3/08–2, நாள்.10.07.2008ல், மேற்படி அரசாணைகள் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணியாற்றும் சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கும் நீட்டிப்பு செய்யப்பட்டு அரசாணை நிலை எண்.120 நிதித் துறை, நாள்.02.02.1990ல் ஏற்கெனவே ஆணை வெளியிடப்பட்டுள்ளது எனவும், நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்க பணிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

மேற்படி அரசு கடிதத்தின் அடிப்படையில் அரசாணை நிலை எண்.120 நிதித் துறை, நாள்.02.02.1990ஐ சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துவரும் தகுதியுள்ள சுகாதார ஆய்வாளர்களுக்கு நடைமுறைப்படுத்திட நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.255/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.2
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/6206/2008</u>**

**<u>ஆணையாளரின் 10/10/2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :546/2008 பொருள் எண்.10

**<u>அரசாணை அமலாக்கத்திற்கு பின்னேற்பு அனுமதி வேண்டி</u>**

நிதி (சம்பள குழு)த் துறையின் 13-08-2008 நாளிட்ட அரசாணை நிலை எண்.351ல், நான்காவது , ஐந்தாவது (தமிழ்நாடு) ஊதிய குழு நிலுவைத் தொகைகளை 10-06-1985 நாளிட்ட அரசாணை நிலை எண்.555, நிதி (சம்பளக் குழு)த் துறை, 27-06-1989 நாளிட்ட அரசாணை நிலை எண்.666, நிதி (சம்பள குழு)த் துறை, 13-04-1998 நாளிட்ட அரசாணை நிலை எண்.162, நிதி (சம்பள குழு)த் துறை, 31-07-2004 நாளிட்ட அரசாணை நிலை எண்.413, நிதி (சம்பள குழு)த் துறை, 31-07-2004 நாளிட்ட அரசாணை நிலை எண்.414, நிதி (சம்பள குழு)த் துறை,31-07-2006 நாளிட்ட அரசாணை நிலை எண்.490, நிதி (சம்பள குழு)த் துறை, 08-10-2007 நாளிட்ட அரசாணை நிலை எண்.484, நிதி (சம்பள குழு)த் துறை ஆகிய அரசாணைகளில் கூறப்பட்டுள்ளபடி வழங்க ஆணையிடப்பட்டது என்றும், 26-09-1999 நாளிட்ட நிதித் துறையின் கடிதம் எண்.67680/CMPC/99-1ல், ஐந்தாவது ஊதிய குழு 01/06/1988 முதல் 31/05/1989 வரை காலத்திற்கான நிலுவை தொகையினை பெற்று வழங்க 31/12/1999 வரை கால நிர்ணயம் நீட்டித்து ஆணை வழங்கப்பட்டது. அதற்கு மேலும் காலம் நீட்டிக்கப்படாத காரணத்தினால், அரசுக்கு தெளிவுரை கோரி அனுப்பப்பட்ட ஒரு சிலருக்கு மட்டும் நிலுவை தொகையினை பெற்று வழங்க, நிர்வாக ரீதியில் ஏற்பட்ட கோளாறுகளுக்கு கண்டனம் தெரிவித்து, சம்பளம் பெற்று வழங்கும் அதிகாரி/கருவூல அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

நிதி (சம்பள குழு)த் துறையின் 31-07-2006 நாளிட்ட அரசாணை நிலை எண்.490ல், 01/08/2006ல் பணியில் உள்ள அலுவலர்கள் மற்றும் அடுத்து ஓய்வு பெறும் அலுவலர்களுக்கு 01/01/1996 முதல் 31/03/1998 வரையிலான 60% ஊதிய குழு நிலுவை தொகை 31/03/2003 வரை வட்டியுடன் சேர்த்து, 3 ஆண்டு தவணைகளில் பணமாக 2006-07 நிதியாண்டு முதல் வழங்க ஆணையிட்டுள்ளது. மேலும், இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணை தொகைகள் 2007-2008 மற்றும் 2008-2009 நிதியாண்டுகளில் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் நிதி (சம்பள குழு)த் துறையின் 08-10-2007 நாளிட்ட அரசாணை நிலை எண்.484ல், 60% ஊதிய குழு நிலுவை தொகைக்கு 31-03-2003ற்கு பின் அவ்வரசாணை பிறப்பிக்கப்பட்ட தேதி வரையிலான காலத்திற்கு பொது வருங்கால வைப்பு நிதிக்கு எவ்வளவு சதவீத வட்டித் தொகையோ அதே சதவீத தொகைக்கு வட்டி கணக்கிட்டு வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிர்வாக சீர்திருத்த குழு தனது அறிக்கையில் பல நேர்வுகளில் ஊதிய குழு நிலுவை தொகை பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் இதுநாள்வரை பெற்று வழங்கப்படாமல் இருப்பது சுட்டிகாட்டியுள்ளது.

எனவே, அரசு நிர்வாக சீர்திருத்த குழுவின் பரிந்துரைகளை கவனமுடன் பரிசீலித்து, ஊதிய குழு நிலுவை தொகைகளை பெற்று வழங்க கீழ்கண்டபடி ஆணையிட்டுள்ளது:

1. நான்காவது ஊதிய குழு நிலுவை தொகை இதுநாள் வரை பெற்று வழங்கப்படாமல் இருந்தால் தற்பொழுது பெற்று வழங்கலாம்.

2. ஐந்தாவது ஊதிய குழு 01/06/1988 முதல் 31/05/1989 வரையிலான காலத்திற்குரிய நிலுவை தொகையினை பொறுத்தவரை, தற்போது பணியிலிருக்கும் அலுவலருக்கு பெற்று வழங்கப்பட வேண்டியிருந்தால், இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்ட நாள் முதல் இரண்டு மாதங்களுக்குள் பெற்று இத்தொகையினை அவ்வலுவலரின் பொது வருங்கால வைப்பு நிதியில் சேர்க்க துறைத் தலைவர்களுக்கு சிறப்பு அனுமதி அளித்து ஆணையிட்டுள்ளது மேலும், ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு, நிலுவை தொகையினை, 01.08.1989 முதல் ஓய்வு பெறும் நாள் வரை வட்டியுடன் கூடிய தொகையினை பெற்று அவ்வலுவலருக்கு வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. கருவூல அதிகாரி/உதவி கருவூல அதிகாரி/சம்பள கணக்கு அலுவலர் இந்த நிலுவை தொகை பட்டிகளை அனுமதி அளிக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. 60% ஊதிய குழு நிலுவை தொகையினை பொறுத்தவரை நிதி (சம்பள குழு)த்துயையின் 31.07.2006 நாளிட்ட அரசாணை நிலை எண்.490 மற்றும் 08.10.2007 நாளிட்ட அரசாணை நிலை எண்484, குறிப்பிட்டுள்ளபடி பின்பற்றும்படியும், நிலுவை தொகை வழங்கப்பட வேண்டியிருப்பின் தற்போது தீர்வு செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது.

13-08-2008 நாளிட்ட அரசாணை நிலை எண்.351, நிதி (சம்பள குழு)த் துறை, மன்ற பின்னேற்பிற்குட்பட்டு ஆணையரின் 09/09/2008 நாளிட்ட ஆணையின்படி, சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

எனவே, நிதி (சம்பள குழு)த் துறையின் 13-08-2008 நாளிட்ட அரசாணை நிலை எண்.351-யினை, சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு, மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டி, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக, மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.250/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

**ம.அ.2.ந.க.எண்.இ1/7363/2008**
**ஆணையர் அவர்களின் 14.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :547/2008 பொருள் எண்.11

**இராஜாஜி சாலையில் M–1 துறைமுகம் முன் பக்க இடத்தினை கையகப்படுத்தி சாலையை விரிவாக்கம் செய்தல்**

வார்டு எண்.27 மண்டலம்–2

| | |
|---|---|
| சாலையை விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய இடம் | இராஜாஜி சாலை M–1 துறைமுகம் காவல் நிலையம் முன்பக்கம் |
| விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய இடத்தின் பரப்பளவு மற்றும் புல எண். | 150 ச.மீ. புல எண்.3827/1, 3827/2 பிளாக் எண்.33, வ.உ.சி. நகர் கிராமம் |
| திட்ட முன்மொழிதல் | சாலை குறுகலாக இருப்பதால் விரிவாக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது |
| வார்டு குழு தீர்மானம் (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 2வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.16, நாள் :13.10.2008 |

எனவே, மேற்கண்ட சாலையை விரிவாக்கம் செய்ய இராஜாஜிசாலை M–1 துறைமுகம் காவல் நிலையம் முன்பக்கம் உள்ள இடத்தினை கையகப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"16.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.306/2008, நாள்: 16.10.2008-ன்படி, இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.261/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.2
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**நிமஉது நக எண்.எல்இ8/3861/05**
**ஆணையர் அவர்களின் 22.09.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :548/2008 பொருள் எண்:12

**நில மாற்றம்**

சென்னை சௌகார்பேட்டைப் பகுதியில் பொது மக்களுக்கு தேவையான மின்சாரம் தடங்கலின்றி விநியோகம் செய்ய, மண்டலம்–3, வார்டு எண்.48–ல் தண்ணீர் தொட்டி தெருவிலுள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை துணை மின் நிலையம் அமைப்பதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நில மாற்றம் செய்திடுமாறும், நிலக்கிரயம் செலுத்துவதை எதிர்நோக்கி நிலத்தில் பணிகளை துவக்க முன் நுழைவு அனுமதி வழங்குமாறும், 8.8.2008 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம் கோரியுள்ள நிலம் சம்பந்தமாக ஏற்கனவே மண்டல அலுவலர்–3 அவர்களால் அளிக்கப்பட்ட 8.1.07 நாளிட்ட அறிக்கையில், தமிழ்நாடு மின்சார வாரியம் கோரியுள்ள நிலம் சென்னை மாநகராட்சி மின் பணிமனையின் இருப்பு அறை (Store Room) ஆகுமெனவும், இந்த கட்டடம் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது எனவும், இக்கட்டடம் சம்பந்தமாக பதிவுகள் எதுவும் வார்டு எண்.48–ல் பராமரிக்கப்படும் அசையாச் சொத்து பதிவேட்டில் காணப்படவில்லையெனவும், தமிழ்நாடு மின்சார வாரியம் கோரியுள்ள நிலத்துக்கு சந்தை விலை மதிப்பினை பெற்று ஆணையர் அவர்களின் ஒப்புதலுடன் வார்டு குழு–3 இன் பரிந்துரையினை பெற்று மேல் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிலம் வ.உ.சி. நகர் கிராமம், புல எண்.7878/1 இன் பாகத்திலுள்ள 2881, ச.அடி பரப்பளவு கொண்ட சென்னை மாநகராட்சி (தனி) என வகைப்படுத்தப்பட்ட நிலமாகும்.

தமிழ்நாடு மின்சார வாரியம் கோரியுள்ள 2881 ச,அடி நிலம் சென்னை மாநகராட்சி மின் பணிமனையின் இருப்பு அறையாக ( Store Room) உள்ளதால், இந்நிலம் சென்னை மாநகராட்சி மின்சாரத் துறையின் பிற்கால வளர்ச்சிப் பணிக்கு தேவைப்படுமா என்பது குறித்து அறிக்கை அளிக்குமாறு சென்னை மாநகராட்சி மின்சாரத் துறையிடம் கோரியதில், தற்போது இந்த நிலத்தில் மின் பணிமனை இயங்காத நிலையில் உள்ளதாகவும், மேலும் மின் பணிமனையை உபயோகப்படுத்துவதற்கு தற்போது உத்தேசம் இல்லையெனவும், மேற்படி நிலம் சென்னை மாநகராட்சி மின் துறையின் பிற்கால வளர்ச்சி பணிக்கு தேவையில்லை எனவும்,6.8.2008 நாளிட்ட மின்சாரத் துறையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணை மின் நிலையம் கட்டுவதற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் கோரியுள்ள மேற்படி 2881 ச.அடி பரப்பளவு கொண்ட நிலத்தினை, சந்தை விலை மதிப்பின் அடிப்படையில் நிலக்கிரயம் பெற்றுக் கொண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிலமாற்றம் செய்வது குறித்து மன்றத்தின் அனுமதியினை பெறுவதற்காக 3–வது மண்டல வார்டு குழு தனது தீர்மானம் எண்.562, நாள்.28.8.08 பரிந்துரை செய்துள்ளது.

மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான நிலங்கள் அது எந்த அரசு மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனத்துக்கு தேவையானாலும், அதனை அப்போதைய சந்தை மதிப்பு அடிப்படையில்தான் கொடுக்கவேண்டும் என அரசாணை (நிலை) எண்.35, ந.நி.(ம)கு,வ., (மாந2) துறை நாள்.17.2.2007–ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையின்படி மாநில மற்றும் மைய அரசு துறைகள் அல்லது மாநில மைய அரசு உடமையான பொதுத்துறை அமைப்புகளுக்கு கிரயத்துக்கு அளிக்கப்படும் நிலங்கள் உரிமை மாற்றம் செய்வதற்கான அரசிடமுள்ள அதிகாரம் சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் அதன் ஆணையாளருக்கு வழங்கி அரசாணை (நிலை) எண்.25, ந.நி.ம.கு.வ.(நநி5) துறை நாள்.25.2.2000–ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–3, வார்டு எண்.48–ல் தண்ணீர் தொட்டித்தெருவில் துணை மின் நிலையம் கட்டுவதற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் கோரியுள்ள வ.உ.சி. நகர் கிராமம் புல எண்.7878/1 பாகத்திலுள்ள 2881, ச.அடி பரப்பளவு கொண்ட சென்னை மாநகராட்சி தனி நிலத்தினை சந்தை விலை மதிப்பின் அடிப்படையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிலமாற்றம் செய்வது குறித்தும், நிலக்கிரயம் பெறுவதை எதிர்நோக்கி பணிகளை துவக்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்குவது குறித்தும் மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வவிமநி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.252/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/2426/2005
ஆணையர் அவர்களின் 22.09.2008 நாளிட்ட குறிப்பு

29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :549/2008 பொருள் எண்:13

திறந்தவெளி நிலம்

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் கட்டட வரைபட அனுமதிகள் வழங்கும்போது கட்டட உரிமையாளர்களிடமிருந்து சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் நேரடியாக எடுத்துக்கொண்ட திறந்த வெளி நிலங்களை சென்னை மாநகராட்சியின் பராமரிப்புக்கு எடுத்துக்கொள்வதற்கு 19.06.2007 நாளிட்ட கடிதத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் கேட்டுக் கொண்டது.

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் இவ்வாறு நேரடியாக எடுத்துக்கொண்ட 74 இடங்களிலுள்ள திறந்த வெளி நிலங்களை புலத்தணிக்கை செய்து, பரப்பளவு விவரங்கள் சரிபார்த்து, ஆக்கிரமிப்பு விவரத்தினையும் கண்டறிந்து, இந்நிலங்கள் பொது மக்கள் பயன்படுத்தும் விதத்தில் இருக்கும் பட்சத்தில் இந்நிலங்களை சென்னை மாநகராட்சி பராமரிப்புக்கு எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதியினை பெறுவதற்காக வார்டு குழுக்களின் பரிந்துரைகளை பெற்று அனுப்பி வைக்குமாறு அனைத்து மண்டல அலுவலர்களிடமும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதன்பேரில் தற்போது கிடைக்கப்பெற்றுள்ள 4வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.428,429 மற்றும் 430 நாள் 26.08.2008ல் 3 இடங்களிலுள்ள திறந்தவெளி நிலங்களையும், 5வது மண்டல வார்டுகுழு தீர்மானம் எண்.15 நாள் 17.07.2008—ல் ஒரு இடத்திலுள்ள திறந்தவெளி நிலத்தினையும், 7வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.1247 முதல் 1251 வரை நாள் 18.07.2008ல் 5 இடங்களிலுள்ள திறந்தவெளி நிலங்களையும் சென்னை மாநகராட்சி பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ள பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம்பின்வருமாறு :—

| வ. எண் | மண்டலம்/ வார்டு எண். | இடம் | கிராமம் | புல எண் | பரப்பளவு |
|---|---|---|---|---|---|
| 1. | 4/57 | கொன்னூர் நெடுஞ்சாலை | அயனாவரம் | T.S.No.137, 138, 139, 153/1 part 140, 141 part | 381.79 ச.மீ |
| 2. | 4/61 | செங்கற்சூளை சாலை | புரசைவாக்கம் | R.S.No.3062/2 பாகம், 3062/3 பாகம் 3061 பாகம் 3069 பாகம் 3070 பாகம் 3075/1பாகம் 3074 பாகம் 3072 பாகம் | 3572.27 ச.மீ. |
| 3. | 4/61 | புரசைவாக்கம் | புரசைவாக்கம் | 3095 பாகம் | 1358 ச.மீ. |
| 4. | 5/65 | ஜவஉறர்லால் நேரு சாலை | கோயம்பேடு | 31 பாகம் | 481.75 ச.மீ |
| 5. | 7/103 | பூந்தமல்லி நெடுஞ்சாலை | வேப்பேரி | 659/1 பிளாக் 15 | 360 ச.மீ. |
| 6. | 7/103 | பூந்தமல்லி நெடுஞ்சாலை | வேப்பேரி | 658/2 பிளாக் 15 | 293.10 ச.மீ. |
| 7. | 7/109 | உறாடோஸ் சாலை | நுங்கம்பாக்கம் | 428 பாகம் | 223.18 ச.மீ |
| 8. | 7/109 | பைகிராப்ட்ஸ் கார்டன் சாலை | நுங்கம்பாக்கம் | 87/23, 87/24, 87/25 | 126.45 ச.மீ |
| 9. | 7/109 | கல்லூரி சாலை | நுங்கம்பாக்கம் | 81/3, 81/9 பிளாக் 15 | 406.45 ச.மீ |

எனவே, மண்டலம்–4, 5 மற்றும் 7ன் வார்டுகுழு பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி, 9 (ஒன்பது) இடங்களில் உள்ள திறந்தவெளி நிலங்களை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.253/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.5.ந.க.எண்.பி1/7327/2008**
**ஆணையாளர் அவர்களின் 03.10.08 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :550/2008 பொருள் எண்.14

**நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி**

| | | |
|---|---|---|
| மண்டலம்/வார்டு எண் | : | மண்டலம்–5, வார்டு–69 |
| பணியின் பெயர்/விவரங்கள் | : | எழும்பூர் கிராமம், புல எண் 232, பாகம் பிளாக் எண்.15ல் உள்ள அரசுக்கு சொந்தமான 90.0மீ நீளம், 4.5மீ அகலம், 405.0 ச.மீ. பரப்பளவு நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்தல். |
| திட்ட முன் மொழிதல் | : | வார்டு–69, தாண்டவராயன் சத்திரம் பகுதியில் அண்ணா சமூகக் கூடத்திலிருந்து பெரியார் ஈ.வெ.ரா. சாலை வரையில் உள்ள கான்வென்ட் சாலையினை போக்குவரத்து வசதிக்காக அகலப்படுத்துதல். |
| வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள் | : | 5வது மண்டல வார்டுகுழு தீர்மான எண்.18, நாள் : 10.09.08 |

எனவே, மேற்கண்ட அரசுக்குச் சொந்தமான நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு சாலை வசதிக்காக நில உரிமை மாற்றம் செய்வதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ வி (ம) நி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘16.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.301/2008, நாள்: 16.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.259/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பே.சா.து.ந.க.எண்.பி3/3638/2007**
**ஆணையர் அவர்களது 14 .10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :551/2008 பொருள் எண்.15

**நிலம் கையகப்படுத்துதல்**

சென்னை மாநகராட்சி, வார்டு எண்.72, மண்டலம் –5இல் அமைந்துள்ள டாக்டர் குருசாமி பாலம், மற்றும் ஈ.வெ.ரா. சாலை சந்திக்கும் இடத்தில் சாலை குறுகலாக இருப்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் பெருமளவில் பாலம் முழுவதும் வரிசையில் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதால், இந்நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, டாக்டர் குருசாமி பாலமும் ஈ.வெ.ரா. சாலையும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள தனியாருக்கு சொந்தமான நிலங்களை கையகப்படுத்ததி, சாலை விரிவாக்கப் பணிக்கு உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டது. இவ்விரிவாக்க பணி டாக்டர் குருசாமி பாலத்தின் வழியாக வரும் வாகனங்கள் அண்ணாநகர் நோக்கி செல்வதற்கு இடதுபுறம் திரும்ப ஏதுவாக அமைவதின் மூலம், பாலத்தின் மீது வாகன நெரிசல் வெகுவாக குறையும் என்பதால் இத்திட்டத்தின் மூலம் சுமார் 42.50 மீ. நீளமும், 2.50 மீ. அகலமும் சுமார் 106.25 ச.மீ. விஸ்தீரணமுள்ள நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு, அந்நிலத்தை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் விலை மற்றும் ஈட்டுத் தொகையினை செலுத்தி, தனியாரிடமிருந்து நிலமெடுப்பு செய்திடுவதற்கு மன்றத் தீர்மானம் எண் : 662/2007 நாள் 29.12.2007 மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

தற்போது, டாக்டர் குருசாமி பாலமும் ஈ.வெ.ரா. சாலையும் சந்திப்பு விரிவாக்க பணிக்காக முன்று புல எண்களாக 384/1, 384/5, மற்றும் 384/6 என மாற்றபட்டு அதற்கான மனையில் பரப்பளவு விவரம் கீழ்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது,.

| Sl.No. | Survey No. | Extent in Sq.M. |
|---|---|---|
| 1 | 384/5 | 24.59 |
| 2 | 384/6 | 24.00 |
| 3 | 384/1 | 34.29 |
| | | --------- |
| | | 82.88 |
| | | 83.00 |

எனவே, மேற்கண்ட நிகழ்வுகளின்படி முன்னதாக 42.50 மீ நீளமும் 2.50 மீ அகலமும் கொண்ட சுமார் 106.25 சதுர மீட்டர் விஸ்தீரணமுள்ள நிலத்திற்காக மன்றத் தீர்மானம் எண்.662/07 நாள் 29.12.2007 பெறப்பட்டுள்ளதாலும், தற்போது விரிவாக்க பணிக்காக மூன்று புல எண்களாக 384/1, 384/5, 384/6 என மாற்றி அமைக்கப்பட்ட மனையின் பரப்பளவான 83 ச.மீ நிலத்தினை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் விலை மற்றும் ஈட்டுத் தொகையினை செலுத்தி தனியாரிடம் இருந்து நிலமெடுப்பு செய்திடுவதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.(ம)நி)ன் மூலமாக மன்றத்தின் திருத்திய தீர்மானம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"16.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.300/2008, நாள்: 16.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.262/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>ம.அ.5.ந.க.எண்.பி1/7542/2008</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 13.10.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :552/2008 பொருள் எண்.16

**<u>நிலம் கையகப்படுத்துதல்</u>**

| | | |
|---|---|---|
| மண்டலம்/வார்டு எண் | : | மண்டலம்–5, வார்டு–72 |
| பணியின் பெயர்/விவரங்கள் | : | வார்டு–72, எழும்பூர் கிராமம் பிளாக் எண்.16, சர்வே எண்.279, ஆரிங்டன் சாலை – வெங்கடாசலபதி சாலை சந்திக்கும் இடத்தில் தனியாருக்குச் சொந்தமான 330 சதுர அடி நிலத்தை கையகப்படுத்துதல் |
| திட்ட முன் மொழிதல் | : | ஆரிங்டன் சாலை – வெங்கடாசலபதி சாலை சந்திக்கும் இடத்தில் போக்குவரத்து நெரிசலை தடுக்கும் பொருட்டு மேற்படி நிலத்தை நிலம் (ம) உடமைத்துறை மூலம் கையகப்படுத்தி சாலையை அகலப்படுத்துதல். |
| வார்டு குழு தீர்மான எண்/நாள். | : | 5வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.32, நாள் : 10.09.2008 |

எனவே, மேற்கண்ட தனியாருக்குச் சொந்தமான நிலத்தை சாலை அகலப்படுத்தும் பணிக்காக நிலம் மற்றும் உடமைத்துறை மூலம் கையகப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“16.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.305 /2008, நாள்: 16.10.2008-ன்படி, இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.260/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>ம.அ.5.ந.க.எண்.பி3/7285/2008</u>
<u>ஆணையாளர் அவர்களின் 13.10.2008 நாளிட்ட குறிப்பு</u>

<u>29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :553/2008 பொருள் எண்.17

<u>நிலம் கையகப்படுத்த அனுமதி</u>

| | | |
|---|---|---|
| மண்டலம்/வார்டு எண் | : | மண்டலம்–5, வார்டு–75 |
| பணியின் பெயர்/விவரங்கள் | : | சர்வே எண். 8 / 11 ல் தனியாருக்கு சொந்தமான 120 அடி நீளமும் 19 அடி அகலமும் மற்றும் சர்வே எண் 8/6ல் தனியாருக்குச் சொந்தமான 129 அடிக்கு 5 அடி பரப்பளவு நிலத்தை கையகப்படுத்துதல். |
| திட்ட முன் மொழிதல் | : | வார்டு–75, வினாயகபுரம் பகுதியில் விநாயகபுரம் 2வது தெரு மற்றும் 3வது தெருவினை இணைத்து பொதுமக்கள் போக்குவரத்து வசதிக்காக பயன்படுத்துதல். |
| வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள் | : | 5வது மண்டல வார்டுகுழு தீர்மான எண்.33, நாள் : 10.09.2008 |

எனவே, மேற்கண்ட தனியாருக்கு சொந்தமான நிலத்தை சாலை வசதிக்காக கையகப்படுத்த நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ வி (ம) நி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"16.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.307/2008, நாள்: 16.10.2008-ன்படி, இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.258/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பே.சா.து.ந.க.எண்.பி3/3612/2007**

**ஆணையர் அவர்களது 14.10..2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :554/2008 பொருள் எண்.18

**நிலம் கையகப்படுத்துதல்**

சென்னை மாநகராட்சி, வார்டு – 78, மண்டலம் – 5 ல் அமைந்துள்ள ஸ்டெர்லிங் சாலை, நெல்சன் மாணிக்கம் சாலையையும் கல்லூரி சாலையையும் இணைக்கும் முக்கியமான இணைப்பு சாலையாகும். அரும்பாக்கம், அண்ணா நகர் ஆகிய இடங்கிளில் இருந்து வாகனங்கள் மகாத்மா காந்தி சாலையை அடைவதற்கு இந்த சாலையை பெருமளவில் உபயோகிப்பதாலும், இச்சாலை குறுகலாக இருப்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாலும் இதனை தவிர்க்கும் பொருட்டு ஸ்டெர்லிங் சாலையை, ஸ்டெர்லிங் 1வது சந்து முதல் ஸ்டெர்லிங் நிழற்சாலை வரை தனியாருக்கு சொந்தமான நிலங்களை கையகப்படுத்ததி, சாலை விரிவாக்கப் பணிக்கு உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டது. இவ்விரிவாக்க பணி ஸ்டெர்லிங் சாலை வழியாக வரும் வாகனங்கள் நெரிசல் இன்றி செல்ல ஏதுவாக அமையும். எனவே இத்திட்டத்தின் மூலம் சுமார் 220 மீ. நீளமும், 2.00 மீ. வடக்கு பக்கம் சுமார் 90மீ நீளமும் 2.0மீ அகலமும் ஆகமொத்தம் சுமார் 620 ச.மீ. விஸ்தீரணமுள்ள நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு, அந்நிலத்தை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் விலை மற்றும் ஈட்டுத் தொகையினை செலுத்தி, தனியாரிடமிருந்து நிலமெடுப்பு செய்திடுவதற்கு மன்றத் தீர்மானம் எண் : 663/2007 நாள் 29.12.2007 மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

தற்போது, ஸ்டெர்லிங் சாலை, ஸ்டெர்லிங் 1வது சந்து முதல் ஸ்டெர்லிங் நிழற்சாலை வரை சந்திப்பு விரிவாக்க பணிக்காக ஏழு புல எண்களாக மாற்றப்பட்டு அதற்கான மனையின் பரப்பளவு விவரம் கீழ்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது,.

| SL.No | SURVEY No. | EXTENT IN SQ.M |
|---|---|---|
| 01 | 552/2 | 27.25 |
| 02 | 552/1 | 0.50 |
| 03 | 551/4 | 37.00 |
| 04 | 551/12 | 37.00 |
| 05 | 551/3 | 0.08 |
| 06 | 551/2 | 74.50 |
| 07 | 551/11 | 18.00 |
| | | 194.33 ச.மீ |

எனவே, மேற்கண்ட நிகழ்வுகளின்படி முன்னதாக சுமார் 220 மீ. நீளமும், 2.00 மீ. வடக்கு பக்கம் சுமார் 90மீ நீளமும் 2.0மீ அகலமும் ஆகமொத்தம் சுமார் 620 ச.மீ. விஸ்திரணமுள்ள நிலத்திற்காக மன்றத் தீர்மானம் எண்.663/07 நாள் 29.12.2007 பெறப்பட்டுள்ளதாலும், தற்போது விரிவாக்க பணிக்காக ஏழு புல எண்களாக மேற்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்ட மனையின் பரப்பளவான 194.33 ச.மீ நிலத்தினை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் விலை மற்றும் ஈட்டுத் தொகையினை செலுத்தி தனியாரிடம் இருந்து நிலமெடுப்பு செய்திடுவதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.(ம)நிதி)ன் மூலமாக மன்றத்தின் திருத்திய தீர்மானம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"16.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.299/2008, நாள்: 16.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.263/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/764/2008</u>
<u>ஆணையர் அவர்களின் 22.09.2008 நாளிட்ட குறிப்பு</u>

<u>29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :555/2008 பொருள் எண்:19

<u>திறந்தவெளி நிலம்</u>

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் கட்டட வரைபட அனுமதிகள் வழங்கும் போது கட்டட உரிமையாளர்களிடமிருந்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் நேரடியாக எடுத்துக் கொண்ட திறந்தவெளி நிலங்களை உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க முன் வந்துள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் இவ்வாறு நேரடியாக எடுத்துக் கொண்ட திறந்தவெளி நிலங்களை புலத்தணிக்கைச் செய்து பரப்பளவு விவரங்கள் சரிபார்த்து, ஆக்கிரமிப்பு விவரத்தினையும் கண்டறிந்து இந்நிலங்கள் பொது மக்கள் பயன்படுத்தும் விதத்தில் இருக்கும் பட்சத்தில் இந்நிலங்களை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதியினை பெறுவதற்காக வார்டு குழுக்களின் பரிந்துரைகளை பெற்று அனுப்பி வைக்குமாறு அனைத்து மண்டல அலுவலர்களிடமும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன் பேரில் மண்டலம்–9, வார்டு எண்.135 ல், கோடம்பாக்கம் கிராமம், புல எண்.242/2 பாகம், நகர அளவை எண்.212/8 பாகம், பிளாக் எண்.85ல் உள்ள 1100 ச.மீ பரப்பளவு கொண்ட திறந்தவெளி நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு 9வது மண்டல வார்டுகுழு தீர்மானம் எண்.22, நாள் 28.01.2008–ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–9, வார்டு குழு பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கண்ட திறந்தவெளி நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வவிமநி) மூலமாக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.251/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.10.ந.க.எண்.சி1/7153/2008**
**ஆணையரின் 13.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :556/2008 பொருள் எண்.20

**சாலையினை ஒரே சீராக அமைக்க தனியாரிடமிருந்து நிலம் கையகப்படுத்துதல்**

மண்டலம்–10, வார்டு–149 க்குட்பட்ட ராஜா தெரு விரிவு பகுதியும் தெற்கு கால்வாய்கரை சாலையை இணைத்து சாலையினை ஒரே சீராக அமைக்க தனியாருக்கு சொந்தமான சுமார் 753 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் தேவைப்படுகிறது. இணை ஆணையர் (பணிகள்) அவர்களால் இப்பகுதியில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது, இச்சாலையில் போக்குவரத்து இடையூறு இன்றி செல்ல சாலையை அகலப்படுத்த தேவைப்படும் தனியார் நிலத்தை கையகப்படுத்த துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

எனவே, மண்டலம்–10, வார்டு–149 க்குட்பட்ட ராஜா தெரு விரிவு பகுதியும் தெற்கு கால்வாய்கரை சாலையை இணைத்து சாலையினை ஒரே சீராக அமைக்க தனியார் நிலத்தை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் விலை மற்றும் ஈட்டுத் தொகையை செலுத்தி கையகப்படுத்த 10வது மண்டல வார்டு குழுவின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"16.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.303/2008, நாள்: 16.10.2008-ன்படி, இதற்கு 10–வது வார்டு குழுவின் பின்னேற்பு அனுமதி பெறவேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்புமற்றும்நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண் டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.257/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.10.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.10.ந.க.எண்.சி1/6640/2008**
**ஆணையரின் 13.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :557/2008 பொருள் எண்.21

**சாலையினை ஒரே சீராக அமைக்க தனியாரிடமிருந்து நிலம் கையகப்படுத்துதல்**

மண்டலம்–10, வார்டு–154 க்குட்பட்ட கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை ஒரே சீரான அளவில் இல்லாமல் உள்ளது. எனவே, இச்சாலையினை அகலப்படுத்தும் போது, சாலையினை ஒரே சீராக அமைக்க இச்சாலையினை ஒரு பக்கத்தில் அப்பாசாமி ரியல் எஸ்டேட்க்கு அருகில் உள்ள தனியாருக்கு சொந்தமான சுமார் 406.94 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் தேவைப்படுகிறது. இணை ஆணையர் (பணிகள்) அவர்களால் இப்பகுதியில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது, இச்சாலையில் போக்குவரத்து இடையூறு இன்றி செல்ல சாலையை அகலப்படுத்த தேவைப்படும் தனியார் நிலத்தை கையகப்படுத்த துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

சாலை அகலப்படுத்தும் பணிக்கு தனியார் நிலத்தை கையகப்படுத்த 10வது மண்டல வார்டு குழு தனது 21.08.2008 நாளிட்ட தீர்மான எண்.685 இன்படி பரிந்துரை வழங்கியுள்ளது.

எனவே, மண்டலம்–10, வார்டு–154ல் உள்ள கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலையை அகலப்படுத்தும் பணிக்கு தேவைப்படும் தனியார் நிலத்தை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் விலை மற்றும் ஈட்டுத் தொகையை செலுத்தி கையகப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“16.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.302/2008, நாள்: 16.10.2008-ன்படி, இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.256/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.10.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>க.து.ந.க.எண்.பி10/3412/2008</u>**

**<u>ஆணையர் அவர்களின் 23.09.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :558/2008 பொருள் எண்.22

**<u>மதிப்பீடு</u>**

வார்டு எண்.142 மண்டலம்–10

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | கட்டடத்துறை – மண்டலம்–10, வார்டு–142, பீமன்னா கார்டன் தெருவில் உள்ள சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் புதியதாக தரை தளத்தில் 6 வகுப்பறைகள் மாடிப்படி அறை மற்றும் கழிவறைகள் கட்டும் பணி. |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை../மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத் தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.1.0756 கோடி |
| விலைப்பட்டி ஆண்டு | 2008–2009 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| நிதியின் மூலத்தன்மை | மூலதனநிதி – கட்டடத்துறை 2008–2009 |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள். | பின்னர் பெறப்படும். |

எனவே மேற்கண்ட பணிக்காக 2008–2009ஆம் ஆண்டின் விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு ரூ.1,07,56,000/– (ரூபாய் ஒரு கோடி ஏழுலட்சத்து ஐம்பத்து ஆறாயிரம் மட்டும்)க்கு நிலைக்குழுக்கள் (கல்வி), (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ 06.10.08 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 81/08 நாள் 06.10.08 –ன்படி இதற்கு வார்டு குழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.. “

“16.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.292/2008, நாள்: 16.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.265/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.பி9/3392/2008**
**ஆணையர் அவர்களின் 18.09.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :559/2008 பொருள் எண் : 23

**ஏற்கனவே பெறப்பட்ட மதிப்பீடு ஒப்புதல்களை ரத்து செய்து புதிய மதிப்பீடு ஒப்புதல் பெற அனுமதி**

வார்டு எண் : 139 மண்டலம் : 9

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | கட்டடத்துறை – சைதாப்பேட்டை ஜீனிஸ் சாலையில் மகப்பேறு மருத்துவமனையில் (இணைப்பு கட்டிடம் ) தரைதளம், முதல்தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம், மேல்தளம், மாடிப்படி அறை மற்றும் மின்தூக்கியுடன் கூடிய மின்தூக்கி அறை கட்டும் பணி |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை ...../ மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.166.00 இலட்சம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2008–2009 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| நிதியின் மூலத்தன்மை | மூலதனநிதி – கட்டடத்துறை 2008–2009 |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண்.மற்றும் நாள் | பின்னர் பெறப்படும். |

ஏற்கனவே மேற்கண்ட பணிக்காக மதிப்பீடு ஒப்புதல் முறையே தரை தளம் கட்டும் பணி ரூ.44,26,000/– விலை பட்டி ஆண்டு 2007–2008, முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டும் பணிக்கு ரூ.45,20,000/– விலை பட்டி ஆண்டு 2008–2009, மூன்றாம் தளம் கட்டும் பணிக்கு ரூ.24,35,000/– விலை பட்டி ஆண்டு 2008–2009, கூடுதலாக மேல் தளம் மாடிப்படி அறை மின்தூக்கியுடன் கூடிய மின்தூக்கி அறை கட்டும் பணிக்கு ரூ.40,40,000/– விலை பட்டி ஆண்டு 2008–2009ன்படி நிலைக்குழு (சுகாதாரம்) நிலைக்குழு (பணிகள்) நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தீர்மானம் பெறப்பட்டது.

பெறப்பட்ட ஒப்புதலை தொடர்ந்து தரைதளம் கட்டும் பணிக்காக ரூ.44,26,000/–க்கு ஒப்பங்கள் கோரப்பட்டதில் ஒப்பந்ததாரர் எவரும் கலந்துக்கொள்ளவில்லை. எனவே அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு ஏற்கனவே பெறப்பட்ட மதிப்பீடு ஒப்புதல்களை சம்பந்தப்பட்ட நிலைக்குழுக்களின் மூலம் ரத்து செய்யவும் மற்றும் மேற்கண்ட நான்கு பணிகளையும் ஒன்றாக இணைத்து புதியதாக 2008–2009ம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,66,00,000/– (ஒரு கோடியே அறுபத்தி ஆறு இலட்சம் மட்டும்)க்கு நிலைக்குழுக்கள் (பொது சுகாதாரம்) (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

06.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு ( பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண். 60 /2008, நாள் 6.10.2008-ன்படி வார்டு குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

“16.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.293/2008, நாள்: 16.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.266/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>க.து.ந.க.எண்.பி8/321/2008</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 15.10.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :560/2008 பொருள் எண்.24

**<u>சென்னை மாநகராட்சி வணிக வளாகங்கள் (DBOT) முறையில் மேம்படுத்தப்படுத்த அனுமதி</u>**

சென்னை மாநகராட்சியில் 10 மண்டலங்களிலும் பல்வேறு வணிக வளாகங்கள் இயங்கி வருகின்றன. இந்த வணிக வளாகங்களை நவீன முறையில் மேம்படுத்தி இதன் மூலம் வரும் வருவாயை பெருக்கிடவும், பொதுமக்களுக்கு உயர்ரக வணிக வளாகங்களை வழங்கும் பொருட்டும் தற்சமயம் மண்டலம்–8, கோடம்பாக்கம் N.S.K. நெடுஞ்சாலையில் அமைந்துள்ள வணிக வளாகத்தையும், மண்டலம்–10 இந்திரா நகர் 3வது நிழற்சாலையில் இயங்கி வரும் வணிக வளாகத்தையும் உயர்ரக வணிக வளாகங்களாகவும் அதிக வருவாயை வழங்கும் வணிக வளாகங்களாகவும் மாற்றும் பொருட்டு ஆய்வு செய்து நிதி மற்றும் வருவாய் அறிக்கை திட்டத்தின் வடிவமைப்பு பற்றி அறிக்கைகளை பெறுவதற்காக திருவாளர்கள். CRISIL INFRASTRUCTURE என்ற தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிறுவனம், மேற்கூறப்பட்ட இரண்டு வணிக வளாகங்களை நன்கு ஆய்வு செய்து அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளது. இந்நிலையில் மேற்கூறப்பட்ட இரண்டு வணிக வளாகங்களை இடித்து விட்டு, புதிய வணிக வளாகங்களாக வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (DBOT Basis ) முறையின்படி ஒப்பங்கள் கோரி இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசின் ஒப்புதல் பெற நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"16.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.308/2008, நாள்: 16.10.2008-ன்படி, இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.264/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.பி10/1981/2008**
**ஆணையர் அவர்களின் 29.09.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :561/2008 பொருள் எண் : 25

**மதிப்பீடு ஒப்புதல் மற்றும் ஒப்பங்கள் கோரியமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டி**

வார்டு எண் : 151 மண்டலம் : 10

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | கட்டடத்துறை – மண்டலம்–10, வார்டு–151ல் அடையார், வெங்கடரத்தினம் நகரில் 24X7 EOC கட்டடம் கட்டும் பணி. |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை ...../ மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.230.00 இலட்சம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2008–2009 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| நிதியின் மூலத்தன்மை | மூலதனநிதி – கட்டடத்துறை 2008–2009 |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | பின்னர் பெறப்படும். |

மேற்கண்ட பணிக்கு ஏற்கனவே மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் தீர்மான எண்.459/2008, நாள்.27.08.2008 மூலம் பெறப்பட்டுள்ளது. தற்போது அரசு அளித்துள்ள கூடுதல் அதிகாரங்களின்படி இத்திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி போதுமானது என கருதப்படுவதால் ஏற்கனவே பெறப்பட்ட மன்ற தீர்மான எண்.459/2008, நாள்.27.08.2008ஐ ரத்து செய்யவும்,

மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி ஒப்பங்கள் கோரியமைக்கு அனுமதியும் மற்றும் இப்பணிக்காக 2008–2009 ஆம் ஆண்டின் விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு ரூ.2,30,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே முப்பது இலட்சம் மட்டும்)ற்கு நிலைக்குழுக்கள் (பொது சுகாதாரம்) (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"06.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு ( பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண். 62 /2008, நாள் 6.10.2008-ன்படி வார்டு குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"16.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.294/2008, நாள்: 16.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.267/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.து.ந.க.எண்.இ1/534/1999
ஆணையர் அவர்களின் 16.10.2008 நாளிட்ட குறிப்பு

## 29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :562/2008 பொருள் எண்.26

**முந்தைய நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை) – வெளி மாநில மாநகராட்சிகளில் கணக்குகள் பராமரித்தல், தணிக்கைத் தடைகள் நீக்க மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் குறித்த ஆய்வு மேற்கொண்டது – முன்பணத் தொகை நேர் செய்தல்**

சென்னை மாநகராட்சியில் முந்தைய நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை) (1996–2001), தலைவர், உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்று டெல்லி, ஜெய்ப்பூர், மும்பை , கோவா, பெங்களூர் ஆகிய வெளி மாநில மாநகராட்சிகளுக்கு 30.07.2000 முதல் 14.08.2000 வரை பார்வையிட்டு கணக்குகள் பராமரிக்கும் முறைகள், தணிக்கைத் தடைகள் நீக்க மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் போன்ற பணிகளை ஆய்வு மேற்கொள்வதற்காக மன்றத் தீர்மான எண்.255/2000, நாள்.24.05.2000ன்படி அனுமதி வழங்கப்பட்டு ரூ.3 இலட்சம் முன்பணமாக வழங்கப்பட்டது.

இப்பயணத்தில் நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை)ன் 13 உறுப்பினர்களும் அவர்களுக்கு உறுதுணையாக 3 மாநகராட்சி அலுவலர்களும் சென்றுவர அனுமதிக்கப்பட்டனர்.

மேற்படி பயணத்திற்காக வழங்கப்பட்ட முன்பணம் ரூ.3 இலட்சத்தினை நேர் செய்ய வேண்டி அனுப்பிய கோப்பு முன்னாள் நிதி ஆலோசகரால் ஆய்வு செய்யப்பட்டு சில விவரங்கள் கோரப்பட்டது. பெறப்பட்ட முன்பணம் ரூ.3 லட்சத்திற்கான செலவினப் பட்டியல் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

**செலவினப் பட்டியல் – ஆய்வு விவரங்கள்**

| வ. எண். | செலவின விவரம் தலைப்பு | தொகை ரூ. | பற்றுச்சீட்டு எண்./நாள் | செலவின விவரங்கள் |
|---|---|---|---|---|
| 01 | இரயில் பயண டிக்கட்டுகள் முன்பதிவு | 76,064 | சுற்றுவட்டப் பயணச்சீட்டு எண்..613534/14.07.2000 67021513/67021524 மற்றும் 67021570–67021572779/ 13.07.2000 | சென்னையிலிருந்து 30.07.2000ல் புறப்பட்டு 15.08.2000 அன்று சென்னை திரும்புவதற்காக மொத்த ரயில் பயணத்தின் முன்பதிவு கட்டணத்துடன் கூடிய ரயில் கட்டணத் தொகை. இது ஒரு சர்குலர் ரயில் டிக்கட்டாக பதிவு செய்யப்பட்டது. |
| 02 | பேக்கேஜ் டூர், டில்லி தங்குமிடம் | 59,000 | சதர்ன் டிராவல்ஸ் (பி) லிமிடெட், நாள்.11.09.2000 | 01.08.2000 முதல் 07.08.2000 வரை புதுடில்லியில் இறங்கி தங்கி பயண ஏற்பாடுகள் செய்ததற்கான தொகை, தங்கும் வசதி, வாகன வசதிகள் செலவினங்களும் இதிலடங்கும். இறுதியில் 3 உறுப்பினர்கள் வர இயலாத நிலையில் அவர்களுக்கான பயணச் சீட்டு மற்றும் செலவினத் தொகை ரூ.25,324.50/–னை மீளப் பெற இயலவில்லை |
| 03 | மும்பை நகரில் வாகன உபயோகம் | 29,800 | இரசீது எண்.216/08.08.2000 | டெல்லியிலிருந்து மும்பை வந்து இறங்கி அங்கு இரண்டு நாட்கள் வாகனங்கள் ஏற்பாடுகளுக்கான செலவினம் |
| 04 | மும்பையில் தங்கும் வாடகை | 17,912 | 12695/08.08.2000 | 08.08.2000, 09.08.2000 ஆகிய இரண்டு நாட்கள் மும்பையில் தங்குவதற்கான தங்கும் விடுதி கட்டணம் |

**ம.து.ந.க.எண்.இ1/534/1999**

| | | | | |
|---|---|---|---|---|
| 05 | கோவாவில் மட்கான் மாநகராட்சி செல்லுதல் | 14,450 | 4671/10.08.2000 | கோவாவில் 10.08.2000 மற்றும் 11.08.2000 ஆகிய இரண்டு நாட்கள் மட்கான் மாநகராட்சிக்கு சென்று வருவதற்கான வாகன செலவினம் |
| 06 | கோவாவில் இருந்து லோண்டா செலலுதல் | 7,000 | 4672/12.08.2000 | 12.08.2000 அன்று லோண்டா செல்லுவதற்கான பயண ஏற்பாடுகள் செலவினம் |
| 07 | கோவாவில் தங்குமிட வாடகை | 10,356 | 001720/10.08.2000 | கோவாவில் 10.08.2000 மற்றும் 12.08.2000 வரையிலான நாட்களில் தங்குவதற்கான விடுதி கட்டணம் |
| 08 | பெங்களூர் பயண வசதி, தங்குமிட வசதி | 5,000 | 3492/13.08.2000 | 13.08.2000 மற்றும் 14.08.2000 ஆகிய நாட்களில் பெங்களூரில் மாநகராட்சி அலுவலகம் சென்றுவர வாகன மற்றும் தங்குமிட வசதி ஏற்பாடு செய்ததற்கான முன்பதிவு கட்டண செலவினம். பெங்களூரில் வந்து இறங்கிய தேதியில் பிரபல நடிகர் திரு. ராஜ்குமார் கடத்தப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக நகரில் கலவர சூழ்நிலை நிலவியதைத் தொடர்ந்து பயணக் குழுவினரின் ஆலோசனைப்படி ஏற்கனவே, அட்டவணைப்படியிலுள்ள பயணத் திட்டங்கள் ரத்து செய்யப்பட்டதினால் இத்தொகையினை மீளப் பெற இயலவில்லை, |
| 09 | சில்லரை செலவு | 38,918 | சென்னை மாநகராட்சியில் முதன் முறையாகமாமன்ற உறுப்பினர்கள் மற்ற மாநகராட்சி பணிகளை ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதுபோன்ற பயணம் இதற்கு முன்பு ஏற்பாடு செய்யப்படவில்லை. அதற்கான விதிமுறைகளும் தெளிவாக இல்லை. மேலும் மாமன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதி களாக உள்ளதால் அவர் களுக்குரிய மரியாதை அளித்து பயணத்தை சீரிய முறையில் வெற்றிகரமாக முடிக்க வேண்டி இந்தச் செலவினங்கள் தவிர்க்க முடியவில்லை. | மாமன்ற உறுப்பினர்களுக்கு பயணத்தின்போது அவர்களுடைய பொருட்களை ஏற்றியிறக்குவது, தங்கும் இடங்களுக்கு எடுத்துச் செல்வது போன்ற செலவினங்கள் மேலும் மாநகராட்சி அலுவலகங்களில் ஆய்வு மேற்கொள்ள செல்லும்போது சம்மந்தப்பட்ட மாநகராட்சி மேயர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு சால்வைகள், நினைவுப் பரிசுகள் ஆகியவைகள் வழங்கியதற்கான செலவினங்கள். |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | உறுப்பினர் களுக்கான தினச் செலவுகள் | 39,000 | வவுச்சர் எண்.1 முதல் 13 வரை நபர் ஒன்றுக்கு ரூ.3,000/– வீதம்<br>1. திரு. எஸ். நாராயணன்<br>2. திரு. க. எல்லப்பன்<br>3. திரு. பி.டி.சிவாஜி<br>4. திரு. க. ஜம்புலிங்கள்<br>5. திரு.வே.மோகனசுந்த ரம்<br>6. திரு. பாருக்முகமது<br>7. திரு. தி. அறிவுமணி<br>8. திருமதி.கோகிலா ஸ்ரீராமுலு<br>9. திருமதி. செல்வி<br>10. திருமதி. க. நாகம்மை<br>11. திரு. எ. சுந்தர்ராஜ்<br>12. திரு. வை. மணி<br>13. திரு. டி. அந்தோணி | 30.07.2000 முதல் 13.08.2000 வரையிலான பயண காலத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் 15 நாட்களுக்கான தினச் செலவு.<br><br>1 முதல் 10 வரை நிலைக்குழு உறுப்பினர்கள் கணக்கு அலுவலர் உதவியாளர் தட்டச்சர் |
| 11 | மீதித் தொகை திரும்ப செலுத்தப் பட்ட விவரம் | 2,500 | செலுத்துச்சீட்டு எண்.65, நாள்.18.08.2000 | செலவினம் போக மீதமுள்ள தொகை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டது. |
| மொத்தம் | | 3,00,000 | | |

நிலைக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் வெளிமாநில மாநகராட்சிகளின் பணிகளை ஆய்வு செய்வதற்கு வழங்கப்பட்ட முன்பணம் ரூ.3 இலட்சத்தில் எதிர்கொண்ட செலவுத் தொகை ரூ.2,97,500/– ஐ கணக்கு தலைப்பு பல்வகை செலவில் நேர் செய்ய ஆணையாளரின் அனுமதி வேண்டி ஏற்கனவே கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதில், பயணத்தில் கலந்து கொள்ள இயலாத 3 உறுப்பினர்களுக்கான மீளப்பெற இயலாத தொகை ரூ.25,324.50 பெங்களூரில் பயணக்குழுவினர் மாநகராட்சி அலுவலகம் சென்றுவர வாகன மற்றும் தங்குமிட வசதிக்காக செலுத்தப்பட்ட மீளப்பெற இயலாத முன்பதிவுத் தொகை ரூ.5,000/–, துணைச் செலவுச் சீட்டுகள் பெற இயலாத சில்லறைச் செலவினத் தொகை ரூ.38,918/– மற்றும் பயணக்குழுவினருக்கு வழங்கப்பட்ட தினப்படி தொகை ரூ.39,000/– ஆகிய தொகைகளுக்கும் சேர்த்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று அனுப்பும்படியும் நிதி ஆலோசகரால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும் இதுகுறித்து தெரிவிப்பதாவது இதே காலகட்டத்தில் இயங்கிய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) (1996–2001) தலைவர், உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் அடங்கிய குழு டெல்லி, ஜெய்ப்பூர், மும்பை, கோவா மற்றும் பெங்களூர் ஆகிய வெளி மாநில மாநகராட்சிகளுக்கு 06.04.2000 முதல் 19.04.2000 வரை பார்வையிட்டு வரிவிதிப்பு மற்றும் நிதி நிர்வாகம் சம்மந்தப்பட்ட பணிகளை ஆய்வு மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட முன்பணத் தொகை ரூ.3 இலட்சத்தினை நேர்செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 24.06.2004 அன்று நடந்த மாமன்றக் கூட்டத்தில் தீர்மான எண்.133/2004ன்படி நேர் செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக மன்ற உறுப்பினர்கள் மற்ற மாநகராட்சி பணிகளை ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதுபோன்ற பயணம் இதற்கு முன்பு ஏற்பாடு செய்யப்படவில்லை. அதற்கான விதி முறைகளும் தெளிவாக இல்லை. மேலும், மன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகளாக உள்ளதால் அவர்களுக்கு உரிய மரியாதை அளித்து பயணத்தை சீரிய முறையில் வெற்றிகரமாக முடிக்கவேண்டி இந்தச் செலவினங்கள் தவிர்க்க முடியாத செலவினங்களாக இருந்தன. மாமன்ற உறுப்பினர்களுக்கு பயணத்தின்போது அவர்களுடைய பொருட்களை ஏற்றியிறக்குவது தங்குமிடங்களுக்கு எடுத்துச்செல்வது போன்ற செலவினங்கள் இவை அனைத்தும் மற்ற மாநிலங்களில் நடைபெற்றதால் இதற்கான செலவுச் சீட்டுகள் பெற இயலவில்லை. முன்பணம் பெற்று 7 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்னும் நேர் செய்யப்படாமல் உள்ளது.

இதன்பொருட்டு மேலும் தெரிவிப்பதாவது, மேற்படி செலவினப்பட்டியல் உரிய பற்றுச்சீட்டு, பயணச்சீட்டு மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. வெளிமாநில மாநகராட்சிகளின் பணிகளை ஆய்வு செய்வதற்காக ரூ.2,97,500/– செலவிடப்பட்டு மீதித் தொகை ரூ.2,500/– கருவூலத்தில் 18.08.2000 அன்று செலுத்தப்பட்டுள்ளது. எனவே, வழங்கப்பட்ட முன்பணம் ரூ.3 இலட்சத்தில் செலவிடப்பட்ட தொகை ரூ.2,97,500/–ஐ கணக்கு குறியீடு எண்.337ல் கணக்குத் தலைப்பு பல்வகை செலவில் 2008–09ம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்ட தொகையில் இருந்து நேர் செய்யலாம்.

எனவே,

1. பயணத்தில் செல்ல இயலாத 3 உறுப்பினர்களுக்கான பயணச்சீட்டு மற்றும் செலவினத் தொகை ரூ.25,324.50–னை மீளப்பெற சாத்தியமற்ற நிலையில் அத்தொகையினை ஏற்று சரி கட்டுவதற்கும்,
2. பெங்களூரில் பயணக் குழுவினர் தங்கும் மற்றும் வாகன வசதிகள் செய்வதற்காக வழங்கப்பட்ட முன்பதிவு கட்டணத் தொகை ரூ.5,000/–னை மீளப் பெற சாத்தியமற்ற நிலையில் அத்தொகையினை ஏற்று சரி கட்டுவதற்கும்,
3. சில்லறை செலவினங்களுக்கான பட்டியல் தொகை ரூ.38,918/–க்கான துணை செலவின சீட்டுகள் இல்லாத நிலையில் இச்செலவினையேற்று சரிகட்டுவதற்கும்,
4. பயணக்குழுவினருக்கு தினப்படி ரூ.39,000/– வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதியும்
5. முந்தைய நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை) உறுப்பினர்கள் வெளி மாநில மாநகராட்சிகளின் பணிகளை ஆய்வு மேற்கொள்ள வழங்கப்பட்ட முன்பணம் ரூ.3 இலட்சத்தில் எதிர்கொண்ட செலவுத் தொகை ரூ.2,97,500/–ஐ கணக்கு குறியீட்டு எண்.337, கணக்கு தலைப்பு பல்வகை செலவில் 2008–09ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீட்டிலிருந்து நேர் செய்யவும்,
6. மன்றத் தீர்மானம் மூலம் அனுமதி பெறாத ஆக்ரா, மதுரா, ஹரித்துவார் போன்ற இடங்களுக்கும் சென்று வந்ததற்கு பின்னேற்பும்,

நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி / பின்னேற்பு வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.271/2008, நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.7 வ.து.ந.க.எண்.ஆர்.3/1452/2008**
**ஆணையரின் 20.10.2008 நாளிட்ட குறிப்பு**

**29.10.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :563/2008 பொருள் எண்.27

**சொத்து வரி விதிப்பு விலக்கு**

ஈ.வி.கே..சமபத் சாலையில், கதவிலக்கம் 50ல் அமைந்துள்ள தந்தை பெரியார் நினைவிடத்தில் உள்ள கல்வி நிறுவனங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு கதவிலக்கம் 82, 84/1, 84/2, 84/3, 84/4, 84/5, மற்றும் எண்.48 மாணிக்க செட்டி தெரு, சூளை, சென்னை–112ல் அமைந்துள்ள சொத்துக்களுக்கு சென்னை மாநகராட்சி விதி 1919ன் பிரிவு 137ன் கீழ் சொத்துவரி அளிப்பதிலிருந்து விலக்களிக்குமாறு தந்தை பெரியார் கல்வி நிறுவன செயலர் கோரியுள்ளார்.

மண்டலம்–7, வார்டு குழுவில் 19.8.2008 அன்று தீர்மான எண்.1306/08ல் வார்டு குழு தலைவரால் மேற்கண்ட கல்வி நிறுவனங்களுக்கு சென்னை மாநகராட்சி விதி 1919 பிரிவு 101 மற்றும் 137ன் கீழ் சொத்து வரி அளிப்பதிலிருந்து விலக்களிக்க வரிவிதிப்பு மற்றும் நிலைக்குழுவின் பரிந்துரையுடன் மாமன்றத்தின் ஒப்புதல் பெற, தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

எனவே, கதவிலக்கம் 50 ஈ.வி.கே.சம்பத் சாலையில் அமைந்துள்ள தந்தை பெரியார் நினைவிடத்தில் கதவிலக்கம் 82, 84/1, 84/2, 84/3, 84/4, 84/5, மற்றும் எண்.48 மாணிக்க செட்டி தெரு, சூளை, சென்னை–112ல் அமைந்துள்ள சொத்துக்களுக்கு சென்னை மாநகராட்சி விதி 1919ன் பிரிவு 137ன் கீழ் சொத்துவரி அளிப்பதிலிருந்து விலக்களிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.272/2008, நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்